**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ,காஞ்சிபுரம்**.

**முன்னிலை.** திருமதி.R.இராஜேஸ்வரி, பி.காம்., எல்.எல். எம்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,காஞ்சிபுரம்.
2021 ஆண்டு செப்டம்பர் மாதம்20ம் நாள் திங்கள்கிழமை

**இடைக்கால மனு எண். 1/2019**
**இன்**
**அசல் வழக்கு எண்.303/2015**

1. வி.விஜயகுமாரி
2. வி. மணிமாறன்
3. மலா்விழி
4. தேன்மொழி
5. நாகராஜன் ... மனுதாராகள்/வாதி

/எதிராக/

நந்தகுமாா் ... எதிா்மனுதாரா்/பிரதிவாதி

இம்மனு என்முன்பாக இன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாராகள்/ வாதிகளுக்காக வழக்கறிஞா்கள் திரு.E.தங்கராஜ் மற்றும் E.கிருபாநிதி, ஆகியோா்கள் ஆகியோா்கள் முன்னிலையாகியும், எதிா்மனுதாரா்/பிரதிவாதி தரப்பில் திரு.S.பிரேம்குமாா், அவா்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும், மனுவினை இதுநாள்வரை பரிசீலனை செய்தபின் இன்று இறுதியாக இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்,

**உத்தரவு**.

மனுதாரா் இம்மனுவினை கட்டளை 9 விதி 9 உரிமையியல் நடைமுறை சட்டத்தின்படி 16.02.2018 தேதியன்று மனுதாரா்கள்/வாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி தீா்ப்பாணையை இரத்து செய்து உத்தரவிடுமாறு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளாா்கள்.

**2. மனுதாரா் தரப்பு மனுஉரை சுருக்கம்.**

மனுதாரா் இந்த மனுவில் மனுதாரா் அசல் வழக்கில் வாதி கடந்த 16.02.2018 அன்று வழக்கி விசாரணையின் போது 1ம் மனுதாரருக்கு கடுமையான உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தததினால் மனுதாரரால் மேற்படி

வழக்கு தேதியில் ஆஜராக முடியவில்லை. அதனால் மனுதாரர்கள்/வாதிகளின் வருகையின்மை காரணமாக மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிராக வழக்கினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. எனவே மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட வழக்கு தள்ளுபடி தீர்ப்பாணையை இரத்து செய்து உத்தரவிடுமாறு மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

### 3. எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தன்னுடைய எதிருரையில் 1ம் மனுதாரர் கடுமையான உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்ததாக கூறியுள்ளார் ஆனால் மனுதாரர் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார் என்று மருத்துவமனையின் பெயரைக் குறிப்பிடவில்லை மேலும் 1ம் மனுதாரர் மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சீட்டைக்கூட இந்தமனுவோடு தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே இம்மனு தாக்கல் செய்வதற்கு சரியான காரணங்கள் இல்லாத நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை காலவரம்புரை சட்டத்தின் கீழ் அனுமதிப்பதற்கு தகுதியினை இழந்துள்ளது எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

4. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனு அனுமதிக்கப்பட வேண்டுமா? என்பதேயாகும். மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியும், சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**<u>தீர்வு :-</u>**

5. இந்நீதிமன்றமானது வழக்கு ஆவணங்கள் மற்றும் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள், எதிருரையில் குறிப்பிட்டுள்ள ஆட்சேபனைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் மனுதாரர் கடுமையான உடல்நலக்குறைவினால் பாதிக்கப்பட்டு

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த காரணத்தினால் கடந்த 16.02.2018 அன்று வழக்கு விசாரணையின் போது மனுதாரரால் ஆஜராகமுடியாமல் போய்விட்டது என்றும் இதன் விளைவாக மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மனுஉரையில் குறிப்பிட்டுள்ளார். மேற்கொண்டு எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் இம்மனு தாக்கல் செய்வதற்கு சரியான காரணங்கள் இல்லாத நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவினை காலவரம்புரை சட்டத்தின் கீழ் அனுமதிப்பதற்கு தகுதியினை இழந்துள்ளது என பிரதிவாதி தரப்பு எதிருரையில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சினைகளை இறுதியாக தீர்மானிக்கும் பொருட்டு இம்மனுவினை விசாரணை செய்வதில் எதிர் மனுதாரர்ருக்கு எந்தவித கஉஷ்ட நஉஷ்டங்களும் ஏற்பட போவதில்லை என்று இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. எனவே அசல் வழக்கில் ஒருமித்த தீர்வு ஏற்பட வேண்டி நீதியின் நலனைக் கருத்திற்கொண்டு மனுவை அனுமதிக்கலாமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6. முடிவில் மனுவானது அனுமதியளித்து உத்திரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஓ/ப.R.இராஜேஸ்வரி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்